Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.1165/2019

**Depositions of PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மா.வேலுச்சாமி | Occupation | வனச்சரக அலுவலர் |
| Father's name | மாரப்பன் | Calling | |
| Village | மலையடிப்புதூர் | Religion | |
| Taluk | சத்தியமங்கலம் | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2025.

09.07.2025

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது வனமரபியல் கோட்டம் கோயம்புத்தூர் விதைக்கிடங்கு வனச்சரக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது கடந்த 29.09.2018 மற்றும் 30.09.2018 ஆகிய இரு தினங்கள் விடுப்பில் இருந்தேன். அந்த சமயத்தில் திரு.பொன்னுச்சாமி வனச்சரக அலுவலர் கூடுதல் பொறுப்பு அவர்களால் இக்குற்ற சம்பவம் குறித்து 30.09.2018 அறிக்கை குற்றவியல் நீதிமன்றம் எண்.2 திருவில்லிபுத்தூர் நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நான் விடுப்பு முடிந்து பணியேற்றவுடன் இக்குற்ற சம்பவம் குறித்து மின்வாரியத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. என்னுடைய தகவலின் அடிப்படையில் 01.10.2018 அன்று வனத்துறை மற்றும் மின்வாரியத்துறை ஊழியர்களால் சம்பவம் இடம் பார்வையிடப்பட்டு மின்நுகர்வோரான கதிர்வேல் அவர்களின் தந்தையார் சின்னமாரி அவர்களின் பெயரில் மின் இணைப்பு இருந்ததால் அவரது பெயரிலேயே மின் இழப்பீட்டு தொகையாக ரூ.66,810/- (ரூபாய் அறுபத்தாறாயிரத்து எண்ணூற்று பத்து) ரசீது எண். TIV 266 R SIS 47 PCB No.368369 நாள் 12.10.2018 அன்று

மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இக்குற்ற சம்பவத்தில் தப்பியோடிய எதிரிகளில் 2 வது எதிரி குருசாமி த/பெ.சேடி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRLOP(MP) No.18190/2018 நாள் 24.10.2018 ல் முன்ஜாமீன் பெற்றார். முதல் எதிரி கதிர்வேல் த/பெ சின்னமாரி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRLOP(MP) No.17805/2018 நாள் 26.10.2018 ல் முன்ஜாமீன் பெற்றும் வனச்சரக அலுவலகத்தில் ஆஜராகி 10 நாட்கள் கையொப்பமிட்டு வந்தனர். நீதிமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் பிடிபொருட்களுக்கு பி.ஆர்.எண் 853/2018 நாள் 26.11.2018 ல் பெறப்பட்டது. இக்குற்ற சம்பவம் குறித்து ஏ நமுனா என்னால் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் 05.08.2019 ல் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி எதிரிகளால் திருட்டுத்தனமாக மின்வேலி அமைத்து கொல்லப்பட்ட காட்டு மாடு இனம் வன உயிரின பாதுகாப்பு சட்டம் 1972(2006 ம் ஆண்டு திருத்தியபடி) அட்டவணையில் பாதுகாக்கப்பட்டு வரும் அரியவகை உயிரினமாகும். எதிரிகள் செய்த குற்றம் வனஉயிரின பாதுகாப்பு சட்டம் 1972(2006 ம் ஆண்டு திருத்தியபடி) தண்டணைக்குரிய குற்றமாகும் என்பதை பணிவுடன் பதிவு செய்தேன்.

<u>எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை–</u> இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.1165/2019

**Depositions of PW-1**

| Name | திரு.பொன்னுச்சாமி | Occupation | வனச்சரக அலுவலர் |
|---|---|---|---|
| Father's name | நஞ்சப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of July 2025.

09.07.2025

எதிரி ஆஜர் .

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் வனச்சரக அலுவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் வன உயிரின காப்பகத்தில் சாப்டூர் வனச்சரக அலுவலராக பணியாற்றியபோது திருவில்லிபுத்தூர் வனச்சர அலுவலராக கூடுதல் பொறுப்பாக பணியாற்றியபோது கடந்த 29.09.2018 அன்று மாலை சுமார் 6.30 மணியளவில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் திருவில்லிபுத்தூர் வனச்சரகம் வா.புதுப்பட்டி பிரிவு ரெங்கர் தீர்த்தம் பீட் தீர்த்ததொட்டி சராகம் வனப்பகுதிக்கு அருகில் பட்டா நிலத்தில் காட்டு மாடு புதைக்கப்பட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலை உறுதி செய்ய புதுப்பட்டி பிரிவு வனவர் திரு.மாடசாமி, ரெங்கர் தீர்த்தம் பீட் வனக்காப்பாளர் திரு.பெரியசாமி பிள்ளையார்நத்தம் கிராம உதவியாளர் திரு.பாப்பு ஆகியோர் நிகழ்விடத்தை ஆய்வு செய்து குற்றம நடைபெற்றுள்ளதா என அறிக்கை கேட்டிருந்தேன். மேற்குறிப்பிட்ட குழு பட்டா நிலத்தை ஆய்வு செய்து குற்றம் நடைபெற்றுள்ளதாக எனக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து நான் நிகழ்விடத்திற்கு சென்று மேற்குறிப்பிட்ட குழுவினருடன்

விசாசரணை செய்ததில் அந்த பட்டா நிலமானது திரு. கதிர்வேல் வயது சுமார் 59 த/பெ.சின்னமாரி பிள்ளைமார் கீழத்தெரு, திருவில்லிபுத்தூர் என்பவருக்கு சொந்தமான பட்டா நிலம் என தெரியவந்தது. இதை கிராம உதவியாளர் உறுதி செய்தார். மேலும் விசாரணையில் திரு.கதிர்வேல் த/பெ.சின்னமாரி மற்றும் அவரிடம் கூலிவேலை செய்த திரு.குருசாமி வயது சுமார் 60 த/பெ.சேடி நடுத்தெரு, மேல்தொட்டியப்பட்டி, திருவில்லிபுத்தூர் வட்டம், என்ற இருவரும் திரு.கதிர்வேல் அவர்களின் பட்டா நிலம் சர்வே எண்.736 ல் தாழ் மின்னழுத்த கம்பியில் கொக்கி போட்டு அந்த நிலத்தை சுற்றிலும் GI கம்பியை வேலி போல் அமைத்து அந்த கம்பியில் மின் ஒயர்கள் மூலமாக தாழ் மின்னழுத்த கம்பியிலிருந்து மின்சாரத்தை பாய்ச்சி வைத்ததும் அப்போது மேய்ச்சல் தேடி அவ்வழியாக வந்த சுமார் 6 வயது மதிக்கத்தக்க காட்டு மாடு அந்த மின்சார கம்பியில் அகப்பட்டு இறந்ததும் அந்த இறந்த காட்டு மாட்டை மேற்குறிப்பிட்ட குற்றவாளிகள் இருவரும் அதே நிலத்தில் குழி தோண்டி புதைத்ததும் தெரியவந்தது. எனது முன்னிலையில் மேற்குறிப்பிட்ட வனப்பணியாளர்கள் மற்றும் கிராம உதவியாளர் திரு.பாப்பு அவர்கள் முன்னிலையில் இறந்த காட்டு மாட்டின் உடல் தோண்டி எடுக்கப்பட்டது. இரவு நேரம் என்பதால் வனப்பணியாளர்கள் குற்ற நிகழ்விடத்தில் காவலுக்கு அமர்த்தப்பட்டு மறுநாள் காலை 6 மணியளவில் பிள்ளையார்நத்தம் உதவி கால்நடை மருத்துவர் திரு.ஜெயகிருஷ்ணன் அவர்களால் எனது தலைமையிலான மேல்குறிப்பிட்ட குழுவினர் முன் உடற்கூராய்வு செய்து கால்நடை மருத்துவர் காட்டு மாட்டு இறப்பிற்கு மின்சாரம் பாய்ந்ததே காரணம் என உறுதி செய்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள காட்டு மாடு தான் எங்களால் தோண்டி எடுக்கப்பட்டு கால்நடை மருத்துவரால் உடற்கூராய்வு செய்யப்பட்டது. **அவை சா.பொ.1 முதல் 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உடற்கூறு செய்யப்பட்ட காட்டு மாட்டின் உடல் காப்பு காட்டுக்கு எடுத்துச்செல்ல இயலாத நிலையில் நிகழ்விடத்திலேயே அந்த பட்டா நிலத்தில் புதைக்கப்பட்டது. மேலும் குற்றம் நடைபெற்ற பட்டா நிலத்தில் ஸ்தல மகஜர் தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **ஸ்தல மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் குற்ற நிகழ்விடத்தில் மின்ஒயர் சிவப்பு நிற 115 செ.மீ., மின் ஒயர் மஞ்சள் நிறம் 559 செ.மீ. நீளம். தேக்கு கம்பு ஒன்று 107 செ.மீ. நீளம், மூங்கில் கம்பு ஒன்று 103 செ.மீ.நீளம் மூங்கில் கம்பு ஒன்று 129 செ.மீ. நீளம் மஞ்சனத்தி ஒன்று 114 செ.மீ. நீளம் GI

கட்டுக்கம்பி 35.9 மீட்டர் நீளம் கைப்பற்றப்பட்டு பிடி பொருட்கள் படிவம் 90 தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் படிவம் 90ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **படிவம் 90 அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் என்னிடம் காட்டப்படும புகைப்படத்திலுள்ள கம்பிகள் மற்றும் ஒயர்கள் தான் எங்களால் கைப்பற்றப்பட்ட பொருட்களாகும். அவை **சா.பொ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விசாரணையில் தெரிய வந்த மேற்குறிப்பிட்ட குற்றவாளிகள் தலைமறைவு ஆகிவிட்டதால் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெற இயலவில்லை. உடற்கூராய்வு செய்த பிள்ளையார்நத்தம் கால்நடை உதவி மருத்துவரின் உடற்கூராய்வு அறிக்கை அன்றைய தினமே பெறப்பட்டது. எனவே வன விலங்கு பாதுகாப்பு சட்டம் 1972 ன்படி வனவிலங்கு குற்றம் பதியப்பட்டு 30.09.2018 அன்று உரிய வழக்கு ஆவணங்களுடன் வழக்கு தொடர்பான அறிக்கை திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**எதிரித்தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.